செ.வெ.எண்.10 நாள்: 05.11.2020

# தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட சிந்தலக்கரை ஊராட்சியில் 417 வீடுகளுக்கு ரூ.20.42 லட்சம் மதிப்பில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகளை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் துவக்கி வைத்தார். மேலும் புதூர் பேருராட்சியில் ரூ.26.62 லட்சம் மதிப்பில் புணரமைக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட சிந்தலக்கரை ஊராட்சியில் ஜல் ஜீவன் மிசன் திட்டத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் நிகழ்ச்சி, புதூர் பேருராட்சியில் புணரமைக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.11.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட சிந்தலக்கரை ஊராட்சியில் 417 வீடுகளுக்கு ரூ.20.42 லட்சம் மதிப்பில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். மேலும் புதூர் பேருராட்சியில் ரூ.26.62 லட்சம் மதிப்பில் புணரமைக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்டத்தின் பல்வேற வளர்ச்சி திட்டபணிகள் நாளும் பொழுதுமாக மிக வேகமாக மிக துரிதமாக மக்கள் எதிர்பாக்கும் வகையிலே அமலபடுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையிலே தான் இன்றைக்கு கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்க்கு உட்பட சிந்தலக்கரை கிராமத்துலே அங்கே ஜல் ஜீவன் மிசன் திட்டத்தின் கீழ் சிந்தலக்கரையில் 394 வீடுகளுக்கும், துரைச்சாமிபுரத்தில் 23 வீடுகளுக்கும் என மொத்தம் 417 குடியிருப்புக்குகளுக்கு ஒரு குடியிருப்பும் கூட விட்டு போகாமல் ஜல் ஜீவன் மிசன் திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம். 100 சதவித குடிநீர் இணைப்புக்களை அவர்களுடைய இல்லங்களுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே இத்திட்டம் ரூ.20.42 லட்சம் மதிப்பிட்டிலே இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து புதூர் பகுதியில்

ஏற்கனவே இருந்த ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிக்காலத்துலேதான் இது மேம்படுத்தப்பட்டு தரம் உயர்தப்பட்டது. அதுக்கு பிறகு அடிப்படை வசதிகள் வேண்டும் என்ற நோக்கிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு சென்றவுடன் இதிலே 28 லட்சம் ருபாய் மதிப்பிலே புணரமைப்பு பணிகள் எல்லாம் முடிக்கபட்டு இன்று புதுப்பொலிவோடு அரசு மேம்படுத்தப்பட்ட புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் நோயாளிகள் அனைத்து வசதிகளும் பெற வேண்டும் என்று அடிப்படையிலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு தேவைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனைக்கு தேவையான 2 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். மருத்து பணியாளர்கள் போதுமான அளவில் இருக்கின்றார்கள். இந்த மேம்படுத்தப்பட்ட புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல நிலையிலே மக்களுக்கு சேவையாற்றி வருகிறது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.கஸ்தூரி சுப்புராஜ், சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.அனிதா, வட்டாட்சியர்கள் திரு.அய்யப்பன் (எட்டயபுரம்), திரு.ரகுபதி (விளாத்திகுளம்), சிந்தலக்கரை ஊராட்சி தலைவர் திரு.அய்யாத்துரை, மாவட்ட கூட்டுறவு அச்சக தலைவர் திரு.அன்புராஜ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.ஞானகுருசாமி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.முனியசாமி, திரு.விஜயகுமார், திரு.வையணன், திரு.தமிழ்முருகன், திரு.வெம்பூரார், புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கணேசன், கோவில்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சசிகுமார், திரு.ஐகோர்ட் ராஜா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.ரவீந்திரன், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு.காவியா, முக்கிய பிரமுகர்கள் திரு.குருராஜ், திரு.ஞானகுருசாமி, திரு.போடுசாமி, திரு.ஆழ்வார்உதயகுமார், திரு.சீனி(எ)ராஜகோபால், திரு.சுப்புராஜ் மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.